Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00
நல்லூர் இளை நூலகம்
மாநகர..ட்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 11 | [24-03-1993] | புதன்கிழமை | ஓசை 34

## பேராதனை வெளிவாரிபட்டப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடாத்த நடவடிக்கை

பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு கலைமாணி வெளிவாரிப் பட்டப் படிப்புப் பரீட்சையை ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். ஏப்ரல் மாதம் முதலாம் கிழமையளவில் புறப்படும் 'குமண' கப்பலில் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும் எனவும், வினாத்தாள்கள் விமானமூலமாக எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். யாழ். அரச அதிபரின் முயற்சியினால் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்தச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# பிரபாகரனின் தீரத்தை மெச்சுகிறேன்

# அமைச்சர் தொண்டமான் பாராட்டு

## இரு நாட்டு இராணுவங்களை எதிர்த்து போராடிய வீரன்

[கொழும்பு]

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீரத்தை நான் மெச்சுகிறேன். அவர் ஓர் இலட்சியவாதி. இலட்சியங்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப் போராளி. சிறிதாக ஆரம்பித்த இயக்கத்தை இரு நாட்டு இராணுவங்களுக்கு எதிராகப் போரிடும் அளவிற்குப் பலம்வாய்ந்ததாகக் கட்டி எழுப்பிய ஒரு வீரன்". இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்கு புகழாரம் சூட்டியுள்ளார். கடந்தவார "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு பேட்டி அளித்த போதே தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.



அமைச்சர் தொண்டமான் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் ஒருபகுதி வருமாறு:

கேள்வி: ஹொட் ஸ்பிரிங் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருப்பது போல் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நீங்கள் எழுதினீர்களா?

பதில்: ஆம் நான் திரு. பிரபாகரனுக்குக் கடிதம் எழுதினேன். அதில் என்ன தவறு? மங்கள முனசிங்கா குழுவிலிருந்து நான் விலகியதும், தெரிவுக்குழுவுக்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையின் பிரதியையும் விளக்கக் கடிதம் ஒன்றையும் இணைத்து அவருக்கு அனுப்பினேன். இனப் பிரச்சினை குறித்து அவ்வப்போது நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி அந்தக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றார்.

கேள்வி: உங்களுக்குப் பதில் கிடைத்ததா?

பதில்: இல்லை, அக்கடிதத்துக்குப் பிரபாகரன் பதில்தர வேண்டும் என்ற அவசியமில்லை. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அவர் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கருத்துக்களை மங்கள முனசிங்கா குழுவிற்குச் சமர்ப்பிக்க உள்ளதால் வரமுடியாதிருப்பதாகத் தெரிவித்திருந்தேன். ஆகவே மங்கள முனசிங்கா தெரிவுக்குழுவிலிருந்து நான் விலகியது குறித்தும் அதற்கான காரணங்களையும் பிரபாகரனுக்குத் தெரியப்படுத்துவது நியாயமானது.

கேள்வி: சமஷ்டி ஆட்சி முறையிலான ஒரு தீர்வு, தமிழ்மக்களுக்கு எதிரான சதி என்று உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் சமஷ்டித் தீர்வை இவ்வளவு தூரம் எதிர்ப்பது ஏன்?

பதில்: சமஷ்டித் தீர்வு நாம் எதிர்பார்க்கும் இலக்கிற்கு எம்மை இட்டுச்செல்லாது. சமஷ்டி ஆட்சி முறை என்றும், மாகாணத்தைப்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விநியோகம்

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களூடாக கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என யாழ். அரசாங்க ... ரண அட்டைகளுக்கேவழங்கப்படுகின்றன. ஒரு சில நாட்களில் உணவு முத்திரைகளுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து

## புதுக்காட்டு சந்தியில் விமானத் தாக்குதல்

## குழைவெட்டியவர் மிதிவெடியில் காலிழந்தார்

(யாழ்ப்பாணம்)

கோட்டைப் பகுதியில் குழை வெட்டியவர் மிதிவெடியில் சிக்கி தனது காலொன்றை இழந்தார்.

நேற்றுக் காலை பத்து மணியளவில் குழைவெட்டுவதற்காக கச்சேரி நல்லூர் வீதியை சேர்ந்த தம்பிராசா(வயது60) என்பவர் கோட்டைபகுதிக்கு சென்றார். அங்கு குழைவெட்டிக் கொண்டிருந்த போது முன்பு கோட்டையில் இருந்த

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி, கெற்பலி எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கிளாலி, கெற்பலி பண்டிதர் குடியிருப்பை அண்மித்த பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 9-15 மணியளவில் அகோர எறிகணைத் தாக்குதல் இடம் பெற்றது. இதேவேளை கிளாலிக் கடல் பரப்பில் கடற் படையினரின் படகுகளும் கடலில் இருந்து தாக்குதலை நடத்தினதாகவும் அறியப்படுகின்றது.

இதனால் பண்டிதர் குடியிருப்பு, கிளாலி, போன்ற இடங்களில் இருந்து இரவு இரவாக மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடத்துக்குச் சென்று பின்பு காலை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என அறியப்படுகின்றது (86)

## திருமலை நகரப்பகுதியில் தமிழர் வெளியேற்றம்

(கொழும்பு)

திருக்கோணமலை நகரப் பகுதியில் இருக்கும் லவ்லேன் பகுதியில் வசித்துவந்த 33 முஸ்லிம் குடும்பங்களும், 14 தமிழ்க் குடும்பங்களும் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு வெளியேற்றப்பட்ட நிலத்தைப் பௌத்த பிக்கு ஒருவருக்காகத் திருக்கோணமலை மாவட்டச்செயலகம் பின்னர் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

கடந்த டிசம்பரில் காணி அமைச்சு அதிகாரிகள் திருக்கோணமலைக்குவிஜயம்செய்தபோது இப்பௌத்த பிக்குவின் அனுசரணையோடு மாவட்டச் செயலகம் காணிக்கச்சேரி ஒன்றின்மூலம் பகிர்ந்தளிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஜேர்மனி அகதி முகாம் மீது குண்டு வீச்சு தாக்குதல்

அமைச்சர் தொண்டமான் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் ஒருபகுதி வருமாறு:

கேள்வி: ஹொட் ஸ்பிரிங் சஞ்சிகை செய்தி வெளியிட்டிருப்பது போல் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நீங்கள் எழுதினீர்களா?

பதில்: ஆம் நான் திரு. பிரபாகரனுக்குக் கடிதம் எழுதினேன். அதில் என்ன தவறு? மங்கள முனசிங்கா குழுவிலிருந்து நான் விலகியதும், தெரிவுக்குழுவுக்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையின் பிரதியையும் விளக்கக் கடிதம் ஒன்றையும் இணைத்து அவருக்கு அனுப்பினேன். இனப் பிரச்சினை குறித்து அவ்வப்போது நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றார்.

கேள்வி: உங்களுக்குப் பதில் கிடைத்ததா?

பதில்: இல்லை, அக்கடிதத்துக்குப் பிரபாகரன் பதில்தர வேண்டும் என்ற அவசியமில்லை. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அவர் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கருத்துக்களை மங்கள முனசிங்கா குழுவிற்குச் சமர்ப்பிக்க உள்ளதால் வரமுடியாதிருப்பதாகத் தெரிவித்திருந்தேன். ஆகவே மங்கள முனசிங்கா தெரிவுக்குழுவிலிருந்து நான் விலகியது குறித்தும் அதற்கான காரணங்களையும் பிரபாகரனுக்குத் தெரியப்படுத்துவது நியாயமானது.

கேள்வி: சமஷ்டி ஆட்சி முறையிலான ஒரு தீர்வு, தமிழ்மக்களுக்கு எதிரான சதி என்று உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் சமஷ்டித் தீர்வை இவ்வளவு தூரம் எதிர்ப்பது ஏன்?

பதில்: சமஷ்டித் தீர்வு நாம் எதிர்பார்க்கும் இலக்கிற்கு எம்மை இட்டுச்செல்லாது. சமஷ்டி ஆட்சி முறை என்றும், மாகாணத்தைப்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விநியோகம்

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களூடாக கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

தற்போது கப்பல் மூலம் பருத்தித்துறை இறங்குதுறைக்கு எடுத்துவரப்படும் உணவுப் பொருள்கள் தற்போது நிவாரண அட்டைகளுக்கேவழங்கப்படுகின்றன. ஒரு சில நாட்களில் உணவு முத்திரைகளுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து விரைவில் குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## 1150 மெ.தொன் அரிசியுடன் குமாரி ஞாயிறு வரும்

(யாழ்ப்பாணம்)

உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டு 26 ஆம் திகதி குமாரி கப்பல் கொழும்பில் இருந்து புறப்படும் என்றும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் 1029 மெற்றிக் தொன் மா, 1150 மெற்றிக் தொன் அரிசி, 200 மெற்றிக் தொன் சீனி, 30 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, 210 பீப்பா மண்ணெண்ணெய் உடனும், ஏனைய அரசாங்கம் மற்றும் பொது நலதாபனங்களுக்கான பொருள்கள் இக்கப்பலில் வரும் என தெரியவருகின்றது.

இக்கப்பலில் தபால் பொதிகள் ஏற்றுவது தொடர்பாக எந்த ஒரு முடிவும் நேற்று நண்பகல்வரை எடுக்கப்படவில்லை என தெரியவருகிறது. (நி)

## 730 பீப்பா மண்ணெய் நில்கிரியில் வந்தது

(யாழ்ப்பாணம்)

''நில்கிரி'' என்ற கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. உடனடியாகவே கப்பலில் இருந்த சுமார் 730 பீப்பா மண்ணெண்ணெயும் இறக்கப்பட்டது.

இக் கப்பலில் வந்த 10 பீப்பாமண்ணெண்ணெய் காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று முன் தினம் இறக்கப்பட்டது. இக் கப்பல் நேற்று மாலையே கொழும்பு நோக்கிச் சென்று விட்டது. இக் கப்பல் கொழும்பு சென்று மீண்டும் ஒரு தொகுதி மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (க)

## குடும்பத்திற்கு ஒரு லீற்றர் மண்ணெய் விநியோகம்

### இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் மீண்டும் ஒரு தடவை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையில் யாழ். செயலகம் இன்று முதல் ஈடுபடவுள்ளது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மேற்படி மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. ''நில்கிரி'' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெயே இவ்வாறு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் தெரிவித்தார். (க)

# புதுக்காட்டு சந்தியில் விமானத் தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மூன்று குண்டுவீச்சு விமானங்கள் நேற்று காலை 8. 30 மணியளவில் புதுக்காட்டுச் சந்தியில் குண்டுவீச்சுத்தாக்குதலை நடத்தின சந்தியில் மூன்று குண்டுகளையும் தர்மக்கேணி சுதிந்தன் வீதியில் இரு குண்டுகளையும் வீசிச் சென்றன.

இக்குண்டுவீச்சுவிமானங்கள் சுமார் 15 நிமிடம்வட்டமிட்டு தாக்குதல்களை நடத்தின. இக்குண்டுவீச்சு தாக்குதலால் தென்னைமரங்களும் பல சேதமடைந்துள்ளன. பிரதான வீதிகளில் பல குழிகளும் காணப்பட்டன. எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாக அறியப்படவில்லை.

### சிறிலங்காவுடனான பேச்சு முறிவு

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் தாமதமாகலாம்

(வாஷிங்டன்)

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பாகசிறிலங்கா அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுகள் பலனற்ற விதத்தில் முடிவடைந்ததையடுத்து சர்வதேச நாணய நிதிய தூதுக்குழு கடந்த வாரம் வாஷிங்டன் திரும்பியது.

இத் தூதுக்குழு தெரிவித்த சில சிபார்சுகளை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா அரச அதிகாரிகள் மறுத்துள்ள நிலையில் கட்டமைப்பு சீரமைப்பிற்காக சிறிலங்காவிற்கு வழங்கப்பட உறுதியளிக்கப்பட்ட சுமார் 50 மில்லியன டொலர் நிதியுதவி தாமதிக்கப்படலாம் என மேற்குலக ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார சீரமைப்பிற்காக சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு கீழான நிதியுதவி மார்ச் மாதத்தில் சிறிலங்காவிற்கு வழங்கப்படுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய சமூகம் சிறிலங்காவுடன் ஒப்பந்தம்

(பிரசெல்ஸ்)

ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கும் சிறிலங்காவிற்கும் இடையே பொருளாதார வர்த்தக ஒப்பந்தமொன்று பிரசெல்ஸில் கையெழுத்தாகவுள்ளது

இது குறித்த மாநாடொன்றில் கலந்து கொண்ட சிறிலங்காவின் குழு ஐரோப்பிய நாடுகள், விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்போ, தளமோ வழங்கக்கூடாது என வேண்டுகோள் விடுத்தது.

இதேவேளை சிறிலங்காவில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எறிகணை தாக்கு

(கொழும்புத்துறை)

கல்முனையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று இரவு 7.55

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வோல்டர் பேர்னான்டோ நியமனம்

### அவுஸ்ரேலிய தூதுவராக சிறில் ரணதுங்க

[கொழும்பு]

எயர்வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி பிரேமதாசாவினால் கடந்த வாரம் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டார்.

அடுத்த மாதம் சிறிலங்காவின் அவுஸ்திரேலியதூதுவராக பதவி ஏற்று கான்பரா பயணமாகவுள்ள ஜெனரல் சிறில் ரணதுங்கவின் இடத்திற்கு பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

எயர்வைஸ் மார்ஷல் பெர்னான்டோ இதுவரை வகித்து வந்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் பதவியை பாதுகாப்பு அமைச்சின் பொலிஸ் பிரிவில் தற்போது மேலதிக செயலாளராக விளங்கும் மகிந்தபந்துசேன பொறுப்பேற்றுள்ளார்,

தாக்குதல் இடம் பெற்றது. இதேவேளை கிளாலிக் கடல் பரப்பில் கடற் படையினரின் சென்று பின்பு காலை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என அறியப்படுகின்றது (86)

## திருமலை நகரப்பகுதியில் தமிழர் வெளியேற்றம்

(கொழும்பு)

திருக்கோணமலை நகரப் பகுதியில் இருக்கும் லவ்லேன் பகுதியில் வசித்துவந்த 33 முஸ்லிம் குடும்பங்களும், 14 தமிழ்க் குடும்பங்களும் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு வெளியேற்றப்பட்ட நிலத்தைப் பௌத்த பிக்கு ஒருவருக்காகத் திருக்கோணமலை மாவட்டச்செயலகம் பின்னர் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

கடந்த டிசம்பரில் காணி அமைச்சு அதிகாரிகள் திருக்கோணமலைக்குவிஜயம்செய்தபோது இப்பௌத்த பிக்குவின் அனுசரணையோடு மாவட்டச் செயலகம் காணிக்கச்சேரி ஒன்றின்மூலம் பகிர்ந்தளிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஜேர்மனி அகதி முகாம் மீது குண்டு வீச்சு தாக்குதல்

ஜேர்மனியில் அகதிமுகாம் ஒன்றின்மீது இனவெறியர் குழுஒன்று அண்மையில் குண்டு வீச்சுத் தாக்குதல் ஒன்றை நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியின் வடபகுதி நகரமான மோலினில் உள்ள அகதி முகாம் ஒன்றின்மீதே இத்தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்டது.

ஜேர்மனியில் தஞ்சம் கோரிய 30 வெளிநாட்டவர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த தற்காலிக விடுதிமீது இனவெறியர்கள் குண்டுகளை வீசினர். இதனால் எதுவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 4 போராளிகள் வீரச்சாவு

21-3.93 அன்று நண்பகல் 12-00 மணியளவில் திருக்கோணமலை மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் நால்வர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

கப்டன் நம்பி / சுட்டா (பூபாலபிள்ளை லோகிதராசா 2 ம் வட்டாரம், குச்சவெளி, திருமலை.

கப்டன் முடியரசன்/ரவி (சித்திரவேல் முத்திலிங்கம், திருஞானசம்பந்தர் வீதி, திருமலை).

லெப்டினன்ட் மெய்யப்பன் அன்ரன் (குப்பையர் நாகேந்திரன், முதலாம் வட்டாரம், குச்சவெளி, திருமலை).

லெப்டினன்ட் மறைக்கோன் /விஸ்வநாதன் (கந்தவனம்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### காங்கேசன் வீதி திறப்பு விவகாரம்

## செஞ்சிலுவை அதிகாரி பலாலி சென்றார்

யாழ். குடா நாட்டிற்கான அத்தியாவசிய உணவுபொருள்களை காங்கேசன்துறை - சேந்தாங்குளம் வீதி யூடாக குடா நாட்டிற்கு எடுத்து வருவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ். கிளையின் உயர் அதிகாரி நேற்று பலாலிக்கு விஜயம் செய்துள்ளார்.

மேற்படி வாகன அணிமூலம் குடா நாட்டிற்கு உணவு பொருள்களை எடுத்து வருவதில் உள்ள நடைமுறை தொடர்பாக பலாலியில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தெரிய வருகின்றது. (நி)

## இரண்டு மாதங்களில் 20 ராணுவ நடவடிக்கைகள்

வடக்குகிழக்கில் கடந்த இரண்டு மாதங்களில் 20 பிரதான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய போது அமைச்சர் ரணில் விக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இலட்சார்ச்சனை

கோண்டாவில் அருள்மிகு தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையன்று மாலைமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு இலட்சார்ச்சனைகள் இடம்பெறவுள்ளன. இறுதி நாளன்று காலையில் சங்காபிஷேகமும், மதியம் அன்னதானமும், பிற்பகலில் அம்பாள் மணவாளக் கோலத்துடனும் வீதியுலா வருதலும் இடம்பெறும். செவ்வாய்க்கிழமை (6 - 4 - 93) அன்று பௌர்ணமித்தின திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளது.

## குருபூசை

நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் 78ஆம் ஆண்டு குருபூசை நாளை வியாழன் காலை 8 மணி தொடக்கம் சுவாமிகளின் நினைவாலயத்தில் கொண்டாடப்படும். நண்டகல் மகேசுவர பூசை நடைபெறும்.

## மீனவர்களுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கரையோரப் பகுதி மீனவர்களுக்கான வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மீண்டும் யாழ். உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் வழங்கப் படுகின்றன.

தற்போது மீண்டும் உணவு முத்திரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இம் மீனவர்களுக்கு மாதாந்தம் 2 கட்டம் 'இ' உலர் உணவு அட்டைக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதுடன், வறுமை நிவாரண முத்திரைக்கு வழமை போல் உணவுப் பொருள்களும் வழங்கப்படும் என்று யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது. (42)

## பொருட்காட்சி

(வடமராட்சி)

பருத்தித்துறை பாலர் ஆசிரியர் சங்கம் கடந்த சனிக்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு பொருட்காட்சி வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

பாலர் ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி கௌரி-கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற பொருட்கா சி வைபவத்தில், சிறுவர் ஆசிரியர் பயிற்சி நிலைய இயக்குனர் திருமதி பொன்மலர்-இராஜேஸ்வரன் மங்கள விளக்கேற்றி வைத்தார். (யோ)

## மாவீரர் தென்னவனுக்கு மக்கள் அஞ்சலி

(தென்மராட்சி)

## மன்னார் மாவட்ட ஆயர் மகசீன் சிறைக்கும் விஜயம்

மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப் அடிகளார் கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கிருக்கும் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் கைதிகளை சந்தித்துப் பேசினார்.

அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேற்றப்படாத கலையில், மிகுந்த கஷ்டங்நிளை இக்கைதிகள் அனுபவித்து வருவதாகவும், பல வருடங்களாக இவர்கள் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மனிதநேய அடிப்படையில் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வற்புறுத்தியதாக அவர் குறிப்பிட்டார். அடிப்படை வசதிகள் இவர்களுக்கு கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்றும்தெரிய வருகிறது.


## அவசரக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் இருக்கும் சகல பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல்இரண்டு மணியளவில் மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## உதவிக்கொடுப்பனவு

கொடிகாமம் தபாலகத்தில் 1993 மாசி மாதத்தின் பொது சனமாதாந்தஉ தவிக்கொடுப்பனவுகள் 18-3-93 தொடக்கம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தபாலக அதிபர் அறிவித்துள்ளார். (86)

## 6ஆம் ஆண்டு நினைவு



| தாயின் மடியில் | தாயக விடிவில் |
|---|---|
| 11 - 03 - 1964 | 24 - 03 - 1987 |

### வீரவேங்கை அல்போன்ஸ்

(தெய்வேந்திரன் செல்வச்சந்திரன்)

உன் இலட்சியம் நிறைவேற
என்றும் உன் நினைவாக.

நல்லூர், (4519) - குடும்பத்தினர்

யாழ் மாவட்ட

## நகைத் தொழிலாளர் சங்க அறிவித்தல்

யாழ். மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து நகைத் தொழிலாளருக்குமான மேற்படி சங்கத்தின் உறுப்புரிமை விண்ணப்பப் படிவம் தற்போது தற்காலிகமாக இயங்கும் சங்கக் காரியாலயமான இல. 176/5, கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் சத்தியா நகைத் தொழிலகத்தில் 23-03-93 தொடக்கம் 31-03-93 வரையும் வழங்கப்படவிருப்பதால் அனைத்து நகைத் தொழிலாளர்களும் இக்காலப் பகுதிக்குள் சந்தாப்பணம்,

## போலி நோட்டு வைத்திருந்த வங்கி ஊழியர் கைது

(கொழும்பு)

நீண்ட காலமாக நடத்தி வந்ததாகக் கூறப்படும் போலி 500 ரூபா நோட்டு வியாபாரம் தொடர்பாக வங்கி ஊழியர் ஒருவரை சிறிலங்கா பொலீசார் கைது செய்துள்ளனர்.

பொலீசார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இந் நபரிடமிருந்து பெருந் தொகையான நோட்டுக்கள் கைப்பற்றப் பட்டதுடன் இவை வெளிநாட்டில் அச்சிடப் பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இம்மோசடி குறித்து இரகசியப் பொலீசார் மூன்று வங்கி ஊழியர்களையும் தெகிவளையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். அத்தோடு இது குறித்து மேலும் ஒரு நபரைத் தேடி நுவரெலியாப் பகுதிக்கு விரைந்துள்ளனர்.

இந்த போலி நோட்டு மோசடியில் மேலும் பல வங்கி ஊழியர்கள், வியாபாரிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும்பொலீசார் நம்புகின்றனர்.

## R. M. P தேவை

வவுனியாவில் வெகுவிரைவில் திறக்க இருக்கும் டிஸ்பென்சரிக்கு ஓர் ஓய்வு பெற்ற உதவி வைத்திய அதிகாரி (R. M. P.) தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும்.

S. நவரெத்தினம்
18, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி/6255)

சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்

## கருத்தரங்கு

தொடர் உரை: பொருள்—

**"ஈழத்தில் சைவசித்தாந்தம்"**

நிகழ்த்துபவர்:
பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகள்

காலம்: 24-03-1993 புதன்கிழமை மாலை 4-30 மணி.

இடம்: மன்றக் கேட்போர் கூடம்.

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

C. M. நெல்சன்
செயலாளர்.
(சி-6256)

## 3-ம் மாத வீர அஞ்சலி



## இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னேற்ற நிலையம் உதவி

வன்செயல்காரணமாக தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி ஆலயங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்ந்துவரும் குடும்பங்கட்கு சென்ற ஆண்டு பங்கீட்டு அடிப்படையில் உலர் உணவு விநியோகத்தை யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கியுள்ளதாக இதன் இயக்குனர் அருட் திரு. எம். ஈ. பயஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இவ் உலர் உணவு விநியோகம் சுமார் 78, 178 குடும்பங்கட்கு வழங்கப்படவுள்ளதாகவும் உலர் உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து தரைமார்க்கமாக யாழ். குடாநாட்டுக்குள் எடுத்துவர முடியாத நிலை நிலவியதனால் கப்பல் மூலம் மிகவும் சொற்ப தொகை உணவுப் பொருள்களே எடுத்துவர அனுமதி கிடைத்ததாகவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார். இக்காலப் பகுதியில் கப்பல் மூலம் ஐந்து தடவைகள் மட்டும் இவ் உலர் உணவுப் பொருள்கள் எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டதாகவும் இவை சுமார் 50 மெற்றிக தொன்னுக்குள்ளடங்கியதாக் மட்டுமே இருந்ததாகவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார். (71)

## புத்தகக் கண்காட்சியும் கருத்துக் கணிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் புத்தகக் கண்காட்சி ஒன்றை யாழ். மாநகர சபை நடாத்தவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மட்டத்தில் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும் வாசகர்களுக்குத் தேவையான துறைசார்ந்த அறிவியல் நூல்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் இப் புத்தகக்கண்காட்சி நடாத்தப் படவுள்ளது.

அடுத்தமாதம் நடுப்பகுதியில் நடைபெற இருக்கும் இப் புத்தகக் கண்காட்சியின்போது வாசகர்களுக்குத் தேவையான நூல்கள் குறித்தும் புத்தகம் வாசித்தல் தொடர்பாக வாசகர்கள் மட்டத்தில் நிலவும் ரசனை குறித்தும் கருத்துக் கணிப்பு ஒன்று மேற்கொள்ளப் படும். இக் கருத்துக்கணிப்பு யாழ். மாநகரசபையால் மேற்கொள்ளப்படும் புத்தகக் கொள்வனவுக்கு துணைபுரியும் என்று கூறப்படுகிறது. (க)

## குருபூசை

(கொழும்புத்துறை)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ நல்லைக்குருமணியின் குருபூசையும், 12ஆவது ஆண்டு ஆராதனை விழாவும் எதிர்வரும் 30ஆம் திகதி நல்லை ஆதீனத்தில் கொண்டாடப்படவுள்ளது. காலை நிகழ்ச்சிகள் குருமுகூர்த்த ஆலய மண்டபத்திலும், மாலைநிகழ்ச்சிகள் ஆதீன கலா மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. கவிஞர் திலகம் திரு. நாக. பரமசாமி எழுதிய நல்லைக்குருமணி அவர்களின் ''வாழ்க்கை வரலாற்று'' நூல் வெளியிட்டு வைக்கப்படும். (24)

## ஆரம்ப கூட்டம்

கரவெட்டி, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர்திரு கே.பொன்னையா தலைமையில் நடைபெற்றது. (30)

## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர்

### வன்னியசேகரம் கருணைநாதன்

MBBS (Cey) FRCS(E)

[29 - 09 - 1931 — 21 - 03 - 1993]

யாழ். மருத்துவபீடத்தின் முன்னாள் சத்திரசிகிச்சை துறைத் தலைவரும், சத்திரசிகிச்சை நிபுணருமான பேராசிரியர் வ. கருணைநாதன் அவர்கள் 21-03-1993 அன்று மறைந்துவிட்டமை எம்மைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது மறைவு எமக்கு ஈடிணையற்ற இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவபீட ஆசிரியர்,

(வடமராட்சி)

பருத்தித்துறை பாலர் ஆசிரியர் சங்கம் கடந்த சனிக்கிழமை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு பொருட்காட்சி வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

பாலர் ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி கௌரி-கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற பொருட்காட்சி வைபவத்தில், சிறுவர் ஆசிரியர் பயிற்சி நிலைய இயக்குனர் திருமதி பொன்மலர்-இராஜேஸ்வரன் மங்கள விளக்கேற்றி வைத்தார். (யோ)

## மாவீரர் தென்னவனுக்கு மக்கள் அஞ்சலி

(தென்மராட்சி)

சுகவீனங்காரணமாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை தென்னவன் (சேகர்) (மகாலிங்கம் சுதர்சன், சிவனேசன் வீதி, கேணியடி மீசாலை தெற்கு) என்பவரின் புகழுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக கடந்த ஞாயிறன்று மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் திரண்டு வந்து வீரவேங்கை தென்னவனிற்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். அதைத்தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் சாவகச்சேரி வட்டவைப் பொறுப்பாளர் திரு. தமிழன், தென்மராட்சி மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த திரு. அருளாளன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக புகழுடல் மாணவர் இயக்க பாண்ட் வாத்திய இசையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும்இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு இராணுவ மரியாதையுடன் அங்கு விதைக்கப்பட்டது. (மு)(86)

உன் இலட்சியம் நிறைவேற
என்றும் உன் நினைவாக.

நல்லூர், (4519) - குடும்பத்தினர்

யாழ் மாவட்ட

## நகைத் தொழிலாளர் சங்க அறிவித்தல்

யாழ். மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து நகைத் தொழிலாளருக்குமான மேற்படி சங்கத்தின் உறுப்புரிமை விண்ணப்பப் படிவம் தற்போது தற்காலிகமாக இயங்கும் சங்கக் காரியாலயமான இல. 176/5, கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் சத்தியா நகைத் தொழிலகத்தில் 23-03-93 தொடக்கம் 31-03-93 வரையும் வழங்கப்படவிருப்பதால் அனைத்து நகைத் தொழிலாளர்களும் இக்காலப் பகுதிக்குள் சந்தாப்பணம், சேர்வுப் பணம், படிவப் பணம் ஆகியவற்றைச் செலுத்தி தம்மை மேற்படி சங்கத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் உப செயலாளர் செயலாளர்

(சி 6247)

## 4-ம் மாத நினைவுச்சுவடுகள்

## கப்டன் மலரவன் (லியோ)

(காசிலிங்கம் விஜிந்தன்) [புயற்பறவை]

மாதங்கள் நான்கு நகர்ந்தனவே
பாதங்கள் பதித்துத் தமிழ் மண்ணிலே
சோகங்கள் மோதிடும் நெஞ்சினிலே - இனிய
ராகங்கள் மீட்டிட வந்திடுவாய்.
மண்ணிலே பதித்திட்ட தடயங்களை
கண்ணெனப் போற்றிக் காக்கின்றோம்
விண்ணின்று மீண்டு வந்திடுவாய்
எம்மவர் துயர் களைந்திடுவாய்.

– குடும்பத்தினர்.

(4553)

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

C. M. நெல்சன்
செயலாளர்.
(சி-6256)

## 3-ம் மாத வீர அஞ்சலி



## மேஜர் செங்கோலன்

[பொன்னுத்துரை பாலமுருகேஸ்]

(முல்லைத்தீவு கோட்டச்சிறப்புப் பொறுப்பாளர்)

வீரப்பிறப்பு: 05. 08. 1966

வீரச்சாவு: 24. 12. 1992

கொக்குத் தொடுவாயில்
கொடும் பகைவர் கதை முடிக்க
புலிவீரன் செங்கோலன்
புறப்பட்டான் படையோடு
சிங்களப் படைகளோடு
சீற்றத்துடன் போரிட்டு
நாற்பத்து இரு படையை
நடு வழியில் தன் தோழரோடு கொன்றொழித் தான்
முடிவில்,
எதிரியவன் எய்த குண்டு
எம் செல்வத்தின் நெஞ்சில் பாய
தன்னுயிரைத் தான் கொடுத்தே
தமிழ் மண்ணை முத்தமிட்டான்.

''செல்வ பவனம்''
சங்கத்தார்வயல்,
இயக்கச்சி.

உன் பிரிவால் நித்தமும்
இரத்தக் கண்ணீர் வடிக்கும்
– குடும்பத்தினர்.
(4554)

வெளியிட்டு வைக்கப்படும். (24)

பெற்றது. (30)

## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர்

வன்னியசேகரம் கருணைநாதன்

MBBS (Cey) FRCS(E)

[29 - 09 - 1931 — 21 - 03 - 1993]

யாழ். மருத்துவபீடத்தின் முன்னாள் சத்திரசிகிச்சை துறைத் தலைவரும், சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் வ. கருணைநாதன் அவர்கள் 21–03–1993 அன்று மறைந்துவிட்டமை எம்மைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது மறைவு எமக்கு ஈடிணையற்ற இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவபீட ஆசிரியர்,
ஊழியர், மாணவர்.

[சி-6253]

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-24

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - கோட்டையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

அல்போன்ஸ் (தெய்வேந்திரன் செல்வச்சந்திரன்- செல்வச்சந்திரன் வீதி, செட்டித் தெரு, நல்லூர் - யாழ்.)

நாகு ( - இளவாலை)

1989ஆம் ஆண்டு கிளாலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

றோம் (சின்னத்துரை கோணேஸ்வரன் - கச்சாய் வீதி, சாவகச்சேரி )

1991ஆம் ஆண்டு மணலாற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

குன்றன் (சுப்பிரமணியம் குமாரவேல் - புளியம்பொக்கணை, பரந்தன் - கிளிநொச்சி )

1992ஆம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறை முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

2–ம் லெப். மதுரலிங்கம் (சந்திரபோல் அன்ரன் பெர்னாண்டோ-மருத்துவமனை வீதி, மன்னார்)

பூநகரி கல்முனையிலிருந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பலியான குருநகரைச் சேர்ந்த 15 வயது இளைஞன்.

மணலாறு நெடுங்கேணியில் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய விமானக் குண்டு வீச்சில் பலியான யாழ் - திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசிரியர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6249)


## மொடேண் எடியுக்கேஷன் சென்ரர்

(கரவெட்டி)

G.C.E (O/L) மீட்டல் வகுப்புக்கள் (பகல் நேரம்)

ஆரம்பம்: 27-03-1993 காலை 10.00 மணி, சனிக்கிழமை

8—9 ஆங்கிலம்: திரு போஷியஸ் ஆசிரியர்
9—10 தமிழ்: திரு. விசுவாசம் ஆசிரியர்
10—11 விஞ்ஞானம் திரு. மகேந்திரம் ,,
11—12 கணிதம்: திரு. யோகராஜா ,,

பயிற்சி வகுப்பு
கணிதம்: திரு. இராமகிருஸ்ணன் ஆசிரியர்

திரு. சிவராஜா ஆசிரியர்
– நிர்வாகி.

(3418)

நல்லூர் இணை நூலகம் யாழ்ப்பாணம்

# சட்டவிரோத ஆயுதங்கள் கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)
தென்பகுதியில் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி கொலை, கொள்ளை வழிப்பறிகளில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

அண்மைக் காலமாக சட்ட விரோத நவீன ஆயுத பாவனை அதிகரித்து வருவதைத்தொடர்ந்தே பொலீஸ் மா அதிபரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இன்று போதைப் பொருள் கடத்தலுடன் ஆயுதக்கடத்தலும் கணிசமான அளவில் வளர்ந்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

இதேவேளை படைகளிலிருந்து தப்பிச் செல்பவர்கள் ஆயுதங்களுடன் தலைமறைவாகி இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதுகுறித்து முக்கியகவனம் செலுத்தி அவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் பொலீஸ் மா அதிபரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு

தெரியாமல் இருப்பது மோசம்; தெரிய விருப்பம் கொள்ளாமல் இருப்பது அதைவிட பெரிய மோசம்.

-ஆபிரிக்கப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24 - 03 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## மதவாதிகளுக்கு செங்கம்பள வரவேற்பு

தமிழகம் ஒரு குழம்பிய குட்டையாக மாறி வருகின்றது. இதில் மாநில அரசியல்வாதிகளும், தேசிய ரீதியிலான அரசியல்வாதிகளும் ஆதாயம் தேடுவதில் இறங்கியுள்ளனர். இவர்களில் எவரும், தமிழகத்தின் இந்நிலை குறித்துக் கவலைப்படுவதாக இல்லை.

ஏற்கனவே அ. தி. மு. க, தி. மு. க, காங்கிரஸ் அரசியல்வாதிகளால் குழம்பிப் போயுள்ள தமிழகத்தில் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியினதும் பாரதீய ஜனதாக் கட்சியின் வருகையினாலும் மேலும் குழப்பமடைந்துள்ளது. 'ஆட்சிக் கவிழ்ப்புக்கள் புகழ்' சுப்பிரமணியம் சுவாமி, பாரதீய ஜனதாக் கட்சியின் 'சிந்தனையாளரான' கோவிந்தார்சார்யா ஆகியோரின் வருகை இதுவரை டில்லியில் நடத்தப்பட்ட அரசியல் சதுரங்கம் சென்னைக்கே வந்து விட்டது என்று எண்ண வைக்கின்றது.

தமிழகத்தில் கடந்த வருட மத்தியில் புகுந்த சுப்பிரமணியம் சுவாமி 'தமிழக நல்லாட்சி இயக்கம்' என்பதை அமைத்து தனது அரசியல் சித்து விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார். இவர் தனது வழமையான பாணியிலேயே தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அரசை மத்திய அரசு உடனடியாகப் பதவி நீக்க வேண்டும் எனக் கோருகின்றார். இதற்கு ஜெயலலிதா மீதான ஊழல் புகார்களை அடுக்கிக் கொண்டே போகின்றார். இதற்கு இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் மறைமுக ஆசீர்வாதமும், அங்கீகாரமும் இருப்பதாகவே உணரப்படுகின்றது.

இதேவேளை தமிழகத்தினுள் புகுந்த பாரதீய ஜனதாக் கட்சி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஒத்துழைப்புடன் சென்னையில் பெரும் கூட்டம் ஒன்றையும் நடத்தி முடித்திருந்தது. வடஇந்திய மாநிலத் தலைநகரங்கள் எதிலும் பேரணிகளோ, கூட்டங்களோ நடத்த முடியாத நிலையில் பாரதீய ஜனதாக் கட்சி சென்னையில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தி முடித்துள்ளமை அக்கட்சியைப் பொறுத்து பெருவெற்றி என்றே கூறலாம்.

இதேவேளை செல்வி ஜெயலலிதாவும் இக் கூட்டத்திற்கு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்

## தமிழக நூல்கள் தருவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகர சபைக்கென சென்னையில் இருந்து தமிழ் மொழிமூலமான பல்துறை சார்ந்த நூல்கள் தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இத்தகைய நூல்களை பல்வேறு ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களிடம் இருந்து பெற உதவி நாடப்பட்டுள்ளதாகவும் அத்துடன் இந் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபர் ஏ. சி. செபநாயகம் அவர்கள் பகுதிநேர ஆலோசகராக யாழ் மாநகர சபையினருடன் இணைந்து பணியாற்றுகின்றார் என தெரிவிக்கப்பட்டது. [பா]

## மண்டபத் திறப்பும் கண்காட்சியும்

[தென்மராட்சி]
கிளி / தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 60அடி நீளமுள்ள பாடசாலை கொட்டகை திறப்புவிழாவும், கண்காட்சியும் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. (86)

## சங்கக் கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல நோக்குச் கூட்டுறவுச் சங்க வண்ணார்பண்ணைக் கிளை இல: - 5 இல் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய், சீனிபோன்ற பொருள்களே களவு போயுள்ளன.

காவற்காரர் முன் பக்கம் இருக்கப் பின் பக்கமாக நுழைந்த திருடர்களே தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார

## இளைஞர் தடுப்பு முகாமில் கைதிகள் தொகை அதிகரிப்பு

(வவுனியா)
தாண்டிக்குளம் பாடசாலை கட்டடத்தில் செயல்படும் இளைஞர்தடுப்பு முகாமில் உள்ள கைதிகளின் தொகை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதுவித காரணங்களுமின்றி கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத் தடுப்பு முகாமைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள்கூட இம் முகாமிலிருந்து விடுதலை செய்யப்படாமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## கால்நடைகளுக்கு முதலுதவி செயற்திட்டம் நடைமுறை

முல்லைத்தீவு மாவட்டமானது விவசாயச்செய்கையோடு மட்டுமன்றி கால்நடை வளர்ப்பிலும் முக்கியத்துவம்வாய்ந்த ஒரு மாவட்டமாகும். அந்த வகையிலே முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கால்நடை வளர்ப்பிற்குப் பல முன்னோடித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியும் வருகிறது. இதில் கால்நடை முதலுதவிச் சிகிச்சைகளும் அடங்கும்.

குறிக்கப்பட்ட காலங்களில் கால்நடைகளுக்குப் பரவும் தொற்றுநோய்களை இனங்கண்டு அதற்குரிய தடுப்பூசிகள் போடும் வேலையைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக விலங்கு வேளாண்மைப் பகுதி பணி நிலையாளர்கள் தனியாகவும், மிருக வைத்திய உத்தியோகத்தர்களுடன் இணைந்தும் செயற்பட்டுவருகின்றனர்.

## விசர்நாய்க்கடி நோயால் சிறுமி ஒருவர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ச. சோபனா என்னும் சிறுமி விசர்நாய்க்கடி நோய்க்கிலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சிறுமி ஆறு மாதங்களுக்குமுன் தெருநாய் ஒன்றினால் கடியுண்டார் எனவும் அப்போது அருகில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் ஏற்புத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது. பின் காயம் குணமடைந்ததால் அப்படியே விட்டுவிட்டதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி சிறுமிக்கு அப்போது விசர்நாய் கடித்துள்ளதாலேயே இந்நோய்க்கு இலக்காகியுள்ளார். விசர் நாய் கடித்தால் றேபீஸ்வக்சீன் என்னும் விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து 14 தடவை ஏற்றப்பட வேண்டும். அப்படியில்லாமல் வெறும் ஏர்ப்புவலி மருந்தை ஏற்றுவதில் பயன் ஏதும் ஏற்படாது என்றும் அனேகமானோர் இது விடயத்தில் அசட்டையாக இருப்பதாலேயே இந்நோய்க்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## யாழ். செஞ்சிலுவைக்கு எரிபொருள் தட்டுப்பாடு

## நெஞ்செலாம் அன்னை வாழ்வாள்!

பூவென்று பெண்ணையே புகழ்ந்திடும் மண்ணிலே!
புயலாக நீ எழுந்தவள்!
சாவென்றால் அஞ்சிடும் சனங்களின் மத்தியில்
சாவதால் மனம் மகிழ்ந்தவள்!
பாவஞ்செய் இந்தியப் படைகளின் கொடுமையைப்
பாரெலாம் உணர வைத்தவள்!
பூபதி அன்னையே போற்றுவோம் உன்னை இப்
பூமியில் வாழு மட்டும் நாம்!

வாடினாய் பசியிலே! வதங்கினாய் துயரிலே!
வழுவாது உறுதி பூண்டாய்!
கோடியாய் இடரினைக் கொடியவர் செய்யினும்
குலையாது நோன்பு நோற்றாய்!
பாடினார் நின்புகழ் பாவலர் நாவலர்
பாரெலாம் அதிரும் நிலையில்!
மூடினாய் திருவிழி! மூடர் மேற் பெரும்பழி
மொய்த்திடத் தலை குனிந்தார்!

ஆண்டுகள் ஓர் ஐந்து அகன்றுமே போயின
அன்னையை நாமிழந்து!
''மாண்டவர்'' பெயர் புகழ் மறையலாம் எங்களின்
மாமகள் பெயர் நிலைக்கும்!
மீண்டிடும் எங்கள் மண் மீதிலே அன்னையின்
மேன்மைகள் எதிரொலிக்கும்!
நீண்டதோர் காவியம் நிலைபெறும் ஓவியம்
நெஞ்செலாம் அன்னை வாழ்வாள்!

ஃ ஃ ஃ ஃ ஃ

– நிலா தமிழின்தாசன்

## கிரிக்கெட் போட்டியில் கலகம் கத்திக் குத்துக்கு ஒருவர் பலி

(கொழும்பு)
மொரட்டுவையில் இரண்டு பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட வந்தவர்களிடையே மைதானத்திற்கு வெளியே நடைபெற்ற மோதலில் ஒருவர் பலியானர், மூவர் காயமடைந்தனர்.

கடந்த வாரம் மொறட்டுவ வேல்ஸ் குமாரவித்தியாலயத்திற்கும் சாந்த செபஸ்டியன் வித்தியாலயத்திற்கும் இடையில் டிரோன் பெர்னான்டோ விளையாட்டரங்கில் இக் கிரிக்கெட் போட்டி இடம் பெற்றது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அவர்களில் ஒருவர் பின்னர் இறந்துவிட்டார்.

## விளையாட்டு

யா/நாவற்குழி ம. வியின் மேற்படி விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நா. ம.வி மைதானத்தில் பி. ப. 2.30 மணிக்கு நடைபெறும். யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். மகாவித்தியாலயத்தின்புதிய அதிபர்திரு. பி. முத்துலிங்கம் அவர்கள் தலைமையில்போட்டிகள் நடைபெறும்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். பொன்னையா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (36)

❋

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல

❋

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த

தனது வழமையான பாணியிலேயே தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அரசை மத்திய அரசு உடனடியாகப் பதவி நீக்க வேண்டும் எனக் கோருகின்றார். இதற்கு ஜெயலலிதா மீதான ஊழல் புகார்களை அடுக்கிக் கொண்டே போகின்றார். இதற்கு இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் மறைமுக ஆசீர்வாதமும், அங்கீகாரமும் இருப்பதாகவே உணரப்படுகின்றது.

இதேவேளை தமிழகத்தினுள் புகுந்த பாரதீய ஜனதாக் கட்சி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஒத்துழைப்புடன் சென்னையில் பெரும் கூட்டம் ஒன்றையும் நடத்தி முடித்திருந்தது. வடஇந்திய மாநிலத் தலைநகரங்கள் எதிலும் பேரணிகளோ, கூட்டங்களோ நடத்த முடியாத நிலையில் பாரதீய ஜனதாக் கட்சி சென்னையில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தி முடித்துள்ளமை அக்கட்சியைப் பொறுத்து பெருவெற்றி என்றே கூறலாம்.

இதேவேளை செல்வி ஜெயலலிதாவும் இக்கூட்டத்திற்கு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்கியதன் மூலம் தனது அரசியல் நிலைப்பாட்டை தெளிவாகக் காட்டியுள்ளார். இதுவரை மாநிலக் கட்சிகள் கூட்டம் கூடுவதற்கும், போஸ்டர் ஒட்டுவதற்கும் பலத்த கட்டுப்பாடுகளையும், தடைகளையும் ஏற்படுத்தியிருந்த தமிழக முதலமைச்சர் மத்திய அரசின் எதிர்ப்பையும்மீறி 'ஜனநாயக ரீதியான உரிமை' என்ற ரீதியில் பாரதீய ஜனதாக் கட்சிக்குக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கியமை அவர் மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசை எதிர்க்கட்சியுடன் சேர்ந்து எதிர்க்கத் தீர்மானித்துள்ளார் என்பதையே வெளிப்படையாகக் காட்டுவதாகும்.

இந்நிலையானது வடக்கில் இதுவரை காங்கிரசும், பாரதீய ஜனதாவும் நடத்திய மோதலைத் தமிழகத்திற்குள் கொண்டு வந்து சேர்த்ததற்குச் சமனானதாகும். இம்மோதலைத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசிற்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அதன் எதிர்விளைவு தமிழகத்தில் பாரதூரமாக இருக்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

வடக்கில் இந்திரா காங்கிரசுடன் போராட்டம் நடத்தும் பாரதீய ஜனதாக்கட்சி மக்களுக்கு மதவெறி ஊட்டுவதையே தனது பிரசார அடிப்படையாகக்கொண்டுள்ளது. வடக்கில்இதற்குஈடுகொடுக்க முடியாது காங்கிரஸ் கட்சி தடுமாறுகின்றது. ''அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டமை ஒரு பாரதூரமான விடயமல்ல'' என அத்வானி கூறுமளவிற்கு இந்துமதவெறி அவர்களிடம் ஊறிப்போயுள்ளது. இந்நிலையில் இக்கட்சிக்கு தமிழகத்தில் செங்கம்பள வரவேற்பு வழங்கியமை தமிழகத்தில் இதுவரை ஓரளவேனும் குறைந்திருந்த மதக்கலவரங்கள் மீண்டும் தலை தூக்குவதற்கும், இரத்த ஆறு ஓடுவதற்குமே வழிவகுக்கும்.

அதாவது மத அடிப்படைவாதத்திற்கு தமிழகத்திற்குள் ஜெயலலிதா இடம்கொடுத்தமையானது எதிர்காலத்தில் குடிசைக்குள் ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த கதையாகவே அமையும். இதன் விளைவுகள் தெரியவரும்வேளை தமிழ்நாட்டின் நிலைமை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கைமீறிபோய்விட்ட ஒன்றாகவே இருக்கும். அவ்வேளையில் ஏற்படும் விழிப்பானது, கண்கெட்டபின்சூரியநமஸ்காரம் செய்வதை ஒத்ததாகவே இருக்கும்.

---

கொட்டகை திறப்புவிழாவும், கண்காட்சியும் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. (86)

## சங்கக் கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குச் கூட்டுறவுச் சங்க வண்ணார்பண்ணைக் கிளை இல: - 5 இல் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய், சீனிபோன்ற பொருள்களே களவு போயுள்ளன.

காவற்காரர் முன்பக்கம் இருக்கப் பின் பக்கமாக நுழைந்த திருடர்களே தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுகாதார கருத்தரங்கு

மாதாந்தம் 4 ஆம் வியாழக்கிழமை நடைபெறும் சுகாதாரக் கருத்தரங்கு இம்மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம்விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறுமென வலி வடக்குப் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அறிவித்துள்ளார்.

## சிறுமி ஒருவர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ச. சோபனா என்னும் சிறுமி விசர்நாய்க்கடி நோய்க்கிலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சிறுமி ஆறு மாதங்களுக்குமுன் தெருநாய் ஒன்றினால் கடியுண்டார் எனவும் அப்போது அருகில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் ஏற்புத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது. பின் காயம் குணமடைந்ததால் அப்படியே விட்டுவிட்டதாகவும் தெரிய வருகின்றது.

மேற்படி சிறுமிக்கு அப்போது விசர்நாய் கடித்துள்ளதாலேயே இந்நோய்க்கு இலக்காகியுள்ளார். விசர் நாய் கடித்தால் றேபீஸ்வக்சீன் என்னும் விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து 14 தடவை ஏற்றப்பட வேண்டும். அப்படியில்லாமல் வெறும் ஏர்ப்புவலி மருந்தை ஏற்றுவதில் பயன் ஏதும் ஏற்படாது என்றும் அனேகமானோர் இது விடயத்தில் அசட்டையாக இருப்பதாலேயே இந்நோய்க்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## யாழ். செஞ்சிலுவைக்கு எரிபொருள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு இம்மாதத்திற்குத் தேவையான எரிபொருள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் இதனால் அதன் செயற்பாடுகள் மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் யாழ். செஞ்சிலுவைச்சங்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேவையான எரிபொருளை முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கி வந்தது என்றும் அண்மைக்காலமாக தாம் நேரடியாகவே கொள்வனவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அடுத்துவரும் கப்பலில் தமக்குத் தேவையான எரிபொருள் கொண்டுவரப்படாவிட்டால் தமது செயற்பாட்டிற்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

---

மடைந்தனர்.

கடந்த வாரம் மொறட்டுவ ஒருவர் பின்னர் இறந்துவிட்டார்.

## விளையாட்டு

யா/நாவற்குழி ம.வியின் மேற்படி விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நா.ம.வி மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும். யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். மகாவித்தியாலயத்தின்புதிய அதிபர்திரு.பி.முத்துலிங்கம் அவர்கள் தலைமையில்போட்டிகள் நடைபெறும்.

✻

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 1. 30 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியால்ய விளையாட்டரங்கில் அதிபர் திரு.க. நாகராசா தலைமையில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இப்போட்டியின்போதுபிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். பொன்னையா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (36)

✻

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் தெய்வப்பிள்ளை (பச்சை) இல்லம் முதலாம் இடத்தையும், அருணாசலம் (நீலம்) இல்லம் இரண்டாம் இடத்தையும், சிதம்பரப்பிள்ளை (சிவப்பு) இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. ெ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியிலும் பரிசளிப்பிலும் வடமராட்சி கோட்டபிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களையும் வழங்கினார். (25) (36)

✻

சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் திரு. ச. ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில் மூதன்மை விருந்தினராக திரு. பொ. வீரபத்திரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- தென். க. கோட்டம்) சிறப்பு விருந்தினர்களாகதிரு.இ கணேசன். (உதவிக் கல்விப் பணிப்பாளர்-தென். க கோட்டம்) திரு. இ கைலநாதன், (உதவிக் கல்விப் பணிப்பாளர்-தென். க. கோட்டம்) திரு க. சிவபாதசுந்தரம்(சாவகச்சேரி- நகர்க் கொத்தணி அதிபர் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக திரு க.பரணியும், அரசியல்நிர்வாகப் பொறுப்பாளர் திரு. க. கந்தண்ணாவும் கலந்து கொள்வார்கள்.

---

## சந்தை விலைவிபரம் (22-03-1993)

### சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 40.00 | 41.30 | 42.65 | 42.60 | 39 10 | 42.50 | 41.00 | 40.50 |
| 02. | கோதுமை மா | ,, | 19.00 | 20.50 | 24.00 | 20.00 | 18.65 | 24.00 | 22.00 | 23.00 |
| 03. | சீனி | ,, | 50.00 | 51.65 | 53.65 | 57.65 | 52.30 | 57.30 | 55.00 | 54.00 |
| 04. | கத்தரி | ,, | 16.30 | 24.30 | 14.65 | 18.00 | 15.00 | 20.00 | 22.65 | 20.00 |
| 05. | வெண்டி | ,, | 24.30 | 37.00 | — | 12.35 | 12.00 | 30.00 | 23.30 | — |
| 06. | பாகல் | ,, | 19.30 | 23.65 | 13.30 | 21.35 | 20.00 | 17.00 | 17.50 | 34.00 |
| 07. | புடோல் | ,, | 13.00 | 16.30 | 8.30 | 13.00 | 16.00 | 16.00 | 17.50 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 14.00 | 22.65 | 13 30 | 15.35 | 16 30 | 22.00 | 24.65 | 19.00 |
| 09. | தக்காளி | ,, | 21.30 | 27.65 | 20.65 | 15 00 | 17.50 | 29 00 | 22.00 | 22.75 |
| 10. | வாழைக்காய் | ,, | 18.65 | 25.65 | 20.00 | 26.67 | 25.00 | 25.00 | 23.30 | 24.00 |
| 11. | பீற்றூட் | ,, | 9.00 | 12.65 | 9.30 | 10.67 | 11.00 | 8.00 | 15.30 | 11.00 |
| 12. | தேங்காய் | ஒன்று | 26.65 | 34.50 | 32.80 | 32.35 | 31.00 | 34.00 | 26.65 | 21.65 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 14.50 | 23.30 | 14.00 | 21.00 | 15.50 | 18.00 | 19.30 | 21.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 55.00 | 66.65 | 50.00 | 68.35 | 50.00 | 45.00 | 55.00 | 52.50 |
| 15. | வெங்காயம் | ,, | 20.65 | 25.80 | 12.30 | 12.00 | 12.00 | 9.50 | 9.30 | 12.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 30.00 | 35.30 | 35.00 | 32.50 | 30.00 | 45.00 | 35.00 | — |
| 17. | இறால் | ,, | 100.00 | 75.50 | 86.65 | 71.67 | 80.00 | 100.00 | 80.00 | — |
| 18. | பெரியமீன் | ,, | 150.00 | 147.50 | 105.00 | 110.00 | 125.00 | 100.00 | 88.75 | — |
| 19. | சிறியமீன் | ,, | 160.00 | 65.00 | 56.65 | 65.00 | 60.00 | 50.00 | 52.65 | — |
| 20. | முட்டை | ஒன்று | 7.50 | 7.65 | 7.40 | 8.25 | 8.50 | 9.00 | 8.30 | 6.50 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

# தெரிவுக்குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி விலகாது

## சரியானதீர்வுக்கே செல்கிறதாம்

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு விலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறும் என வெளியான செய்திகளில் எந்த விதமான உண்மையும் இல்லை என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக அரச சார்பு பத்திரிகையான சண்டே ஒப்சேவர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்றும் பெரும்பாலான கட்சிகள் வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும், இணைப்பு குறித்து கிழக்கில் தனியான தேர்தல் நடைபெற வேண்டும் என விரும்புவதாகவும் தெரிவித்துள்ளன.

தெரிவுக் குழுவில் பங்குபற்றும் கட்சிகள் பலவும் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டில் ஒருமித்து நிற்பதால் தெரிவுக்குழு நிச்சயமாக ஒரு தீர்வை நோக்கியே செல்வதாகக் கூறலாம் என்றும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் திணைக்களம்

யாழ்ப்பாணம்

துணை வைத்தியசேவை மற்றும் நடுத்தர தொழில்நுட்பவியலாளர் சேவைகளுக்கான

### பயிலுநர்கள் தெரிவு

யாழ்ப் ாண மாவட்டம்


1992ம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மேற்படி சேவைகளுக்கான பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடாத்தப்படும்.

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திரு. ஆர். ஜெயக்குமார் | 'லீலா வாசம்' தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். |
| 02. | செல்வி என். சஜீதா | சேர்ச் ஒழுங்கை, உடுவில், சுன்னாகம். |
| 03. | செல்வி கே. கமலினி | 50, சப்பெல் வீதி, யாழ்ப்பாணம். |
| 04. | திரு. வி. சிவகுமார் | தெனியாவத்தை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. |
| 05. | செல்வி எஸ். சுஜாதா | விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம். |
| 06. | திரு. பி. அரவிந்தன் | சிவபுரி, உசன், மிருசுவில் |
| 07. | திரு. எவ்.எக்ஸ்.சி ரஞ்சன் | கண்டி வீதி, மிருசுவில். |
| 08. | திரு எஸ். ஜெயநாதன் | பிராமணன் தோட்டம், |

## நான்கு போராளிகள்

நிமலநாதன், தம்பலகமம், திருமலை)

ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



கப்டன் முடியரசன் (ரவி)



## வீரவணக்க கூட்டம்

3 ஆம் மாதங்களில் [மார்ச்] வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வலிகாமம்கோட்ட - சண்டிலிப்பாய் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக்கூட்டம் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயமுன்றலில் இன்றுமாலை 7.30 மணிக்கு நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் உரையாற்றவிருக்கும் இவ் வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [90]

## எதிர்க்கட்சி தலைவராக அநுராவை நியமிக்குக

### 45 பா.உ.கள் கோரிக்கை

பதில் எதிர்க்கட்சித் தலைவராக அநுரா பண்டாரநாயக்காவை நியமிக்க கோரும் கடிதம் ஒன்று நாற்பத்தைந்து எம் பிக்களின் கையெழுத்துடன் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க வெளிநாடு சென்றுள்ளதும், பதில் எதிர்க்கட்சித் தலைவராக கே. பி. இரத்தினாயக்காவை நியமிக்கும் படி அவர் பாராளுமன்ற சபாநாயகரைக் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி - 1993 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## மாணவன் கைது

[திருக்கோணமலை]

மூதூரில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஒரு பாடசாலை மாணவன் கைது செய்யப்பட்டார். கடந்த சனியன்று, திருமலை கட்டைபறிச்சான் ஏழாம்வட்டாரத்தைச்சேர்ந்த வர்ணகுலசிங்கம் அருளானந்தம் [வயது20] என்பவரே கைதானவராவர்.

## 18 ஆசிரியர்கள் இடமாற்றம்

ஆசிரியர் சேவையில் இருந்து இம்மாதம் இடமாற்றம் பெற்ற சுமார் பதின்மூன்று ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் இருந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விபரங்கள் வருமாறு: செல்வி ஹேமா பழனித்துரை, செல்வி என். இரட்ணஜோதி, சி.கந்தசாமி, வி. மனோகரன், நா. மகேந்திரன், சௌ. கதிரவேலு, சி. சிவகுமார், க. ஜெயவீரசிங்கம், பா.சிவஞானசுந்தரம், ஆ. நடராஜா, ரி. சமதர்மபாலன், கி. செல்வராசா, ம. குலசிங்கம். (பா)

## பிரபாகரனின்

பிரிப்பது என்றும் பேசுவதெல்லாம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குப் பதிலாகக் குழப்பத்தையே மேலும் ஏற்படுத்துகின்றன. இப்படிப் பாருங்கள்; பொதுவாக்கெடுப்பொன்றின் மூலம் மக்களின் ஒப்புதலைப் பெறாமல் அரசுகூட சமஷ்டி முறைக்கு ஆதரவு தெரிவிக்க முடியாது. இதனை ஜனாதிபதி பிரேமதாசாவே கூறியிருக்கிறார். ஆகவே பிரச்சினையுடன் ஆழ்ந்த பரிச்சயமுள்ள தலைவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக மக்களே முடிவெடுக்கவேண்டியுள்ளது. பாரிய தேசியப் பிரச்சினைகளை மக்களின் ஒப்புதலைக் கேட்பதன்மூலம் தீர்க்க முடியாது என்பது எனது நிலைப்பாடாகும். தலைவர்கள் தமக்கிடையில் நன்றாக ஆலோசனை கலந்த பிறகு எதைச்செய்வது என்பதுபற்றி முடிவெடுக்கவேண்டும். இனப்பிரச்சினையின் முழுமையான அடித்தளத்தைப் புரிந்து கொண்டபிறகு தலைவர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த வழியில் ஒரு தீர்வை அடைய வேண்டும்.

**கேள்வி:** அமைச்சரவையில் ஒரு முக்கியமான அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்ற உணர்வை நீங்கள் மீறுகிறீர்கள் இல்லையா?

**பதில்:** இனப்பிரச்சினை பற்றி நான் திரும்பத் திரும்பப் பேசி வந்திருக்கின்றேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சின் தலைவர் என்ற முறையில் தான்பேசிவருகிறேன் என்பதை அடிக்கடி நான் சொல்லியுள்ளேன் ஆங்கில ஆட்சியின் போது ஓர் ஆளுங்கட்சிஅமைச்சில் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு சரியாகவிருந்தது. நான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சை அமைச்சரவையில் பிரதிநிதித்துவப் படுத்துகின்

பாராளுமன்றத் தெரிவுக் குழு இல்லாமல் செய்துள்ளது. பாராளுமன்றத் தெரிவுக் குழு முன் நோக்கிச் செல்லவில்லை. அது பின் நோக்கியே சென்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். இந்திய - இலங்கை ஒப்பந்தம் முதல் உண்மையில் இணைப்பை தமிழ் மக்கள் ஆதரித்தார்கள் ஆனால் பாராளுமன்ற தெரிவுக் குழு வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதை விரும்புகிறது. எதற்காக? தமிழ் மக்கள் இரத்தம் சிந்திப் பல தியாகங்களைச் செய்த பிறகு பெரும்பான்மைச் சமூகம் பின்நோக்கிச் செல்கிறது. ஆகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுடன் ஏன் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். வடக்கு - கிழக்கைப் பிரித்து வைக்கும் திக்கை நோக்கி நான் ஏன் போகவேண்டும்?

**கேள்வி:** பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** தமிழ் மக்களின் அபிலாசைகளை நடைமுறைப்படுத்தக் கூடிய, பெறுமான முடையதாகத் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும். இதனைத் தெரிவுக்குழு நிறைவேற்றத் தவறிவிட்டது. எடுத்துக் காட்டாக, எனது ஆலோசனையை தெரிவுக்குழு விவாதிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. அடுத்து, சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும்படி சிறினிவாசன் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

**கேள்வி:** பிரபாகரனை நீங்கள் மிகமெச்சி அவருடன் நெருக்கமாக உ ளதற்கான காரணம் என்ன? எப்படியாயினும் பிரபாகரன் ஒரு கொலையாளி என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்

கைச்சேர்ந்த அரைநிர்வாணப் பக்கீர் என்று அழைத்தார்கள். இராணுவத்தினர் கொல்லப்படும் போது பிரபாகரனை கொலையாளி என்கின்றனர். இராணுவமும் இதனைத்தான் செய்கிறது. சண்டை நடக்கும் போது மரணமும் சம்பவிக்கும். ஆகவே இதனை எல்லாம் தனிமைப்படுத்தி அனர்த்தங்களுக்கெல்லாம் காரணம் திரு. பிரபாகரன் என்று அவரை மாத்திரம் தண்டிக்கக் கூடாது. நான் முன்பே கூறியது போல் ஒவ்வொரு தாக்கத்திற்கும் மறுதாக்கம் இருக்கும்.

## இணைப்பை ஏற்றுகொள்ள சுதந்திரகட்சி தயாரில்லை

### அநுரா தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இல்லை என நேற்று பாராளுமன்றத்தில் பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டார நாயக்கா தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அநுரா இணைப்பு விடயத்தில் ஆளும் கட்சியின் நிலைப்பாடு தெளிவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

புலிகளின் சவாலை எந்த அரசானாலும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் படைகளுக்கு சகல விதமான உதவிகளையும் வழங்க வேண்டும் என்றும் அநுரா பண்டார நாயக்கா மேலும் தெரிவித்தார்.

## ஐரோப்பிய

மனித உரிமை மீறல் தொடர்பாக ஐரோப்பிய பொருளாதார சமூக குழு தனது அக்கறையை தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு

ரமசிங்க வெளியிட்டார்.

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று 61 பெரும்பான்மை

## எறிகணை

மணியளவில் கொழும்புத்துறை அரியாலை பூம்புகார் கடற்பரப்பில் நைலோன் வலை மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி எறிகணைத்தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை வவுனியா நொச்சிமோட்டை இராணுவ காவலரண்களிலிருந்து நேற்று முன்தினம்இரவு 9.00மணியளவில் மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணை வீச்சும் பரவலான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவர

பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2-ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடாத்தப்படும்.

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திரு. ஆர். ஜெயக்குமார் | 'லீலா வாசம்' தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். |
| 02. | செல்வி என். சஜீதா | சேர்ச் ஒழுங்கை, உடுவில், சுன்னாகம். |
| 03. | செல்வி கே. கமலினி | 50, சப்பெல் வீதி, யாழ்ப்பாணம். |
| 04. | திரு. வி. சிவகுமார் | தெனியாவத்தை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. |
| 05. | செல்வி எஸ். சுஜாதா | விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம். |
| 06. | திரு. பி. அரவிந்தன் | சிவபுரி, உசன், மிருசுவில் |
| 07. | திரு. எவ்.எக்ஸ்.சி ரஞ்சன் | கண்டி வீதி, மிருசுவில். |
| 08. | திரு எஸ். ஜெயநாதன் | பிராமணன் தோட்டம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி. |
| 09. | செல்வி எஸ். ஜெயவதனி | அமுதசுரபி கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| 10. | செல்வி. கே. தேனகா | 'தேவி வாசா' ஊரெழு கிழக்கு சுன்னாகம். |
| 11. | திரு. ரி. இராஜரஞ்சன் | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. |
| 12. | திரு. என். சூரியகுமாரன் | 79, அரசடி வீதி, யாழ்ப்பாணம். |
| ★13. | செல்வி ஆர். உமையாள் | வடலியடைப்பு. பண்டத்தரிப்பு |
| 14. | திரு என். தனபாலசிங்கம் | உசன், மிருசுவில். |
| 15. | திரு கே. ஆறுமுகநாதன் | அல்லாரை வடக்கு, சொடிகாமம். |
| 16. | செல்வி எம். சுதர்ஜினி | இணுவில் மேற்கு, சுன்னாகம். |
| 17 | செல்வி ஆர். நடனமலர் | நியூ விமாகி 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |
| 18. | செல்வி பி. குந்தவி | 84/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம் |
| 19. | திரு. ரி. சர்வானந்தன் | 445, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். |
| 20. | செல்வி வி.ஜெகதாம்பிகை | 'ஆனந்தாகொட்', கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை. |

2. நேர்முகப் பரீட்சைக்காக மேற்குறித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனியே கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் ★ அடையாளமிட்டவர்களின் கடிதங்கள் இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வேலை நாள் ஒன்றில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 4 15 மணி வரை நேரில் வந்து தமது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தின் 2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் ஒவ்வொன்றினதும் ஒளிப்படப் பிரதியொன்றினையும் கொண்டுவருமாறு சகல பரீட்சார்த்திகளும் கேட்கப்படுகின்றனர்.

4. மேற்படி பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்காக 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ம் திகதி இப்பணிமனையில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமல் போன பரீட்சார்த்திகளும் 02-04-1993ம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

நன்றி


பொ. இரத்தினசபாபதி
பிராந்தியப் பணிப்பாளர்.

(சி/6252)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



கப்டன் முடியரசன்
(ரவி)



கப்டன் நம்பி
(சுட்டா)



லெப். மெய்யப்பன்
(அன்ரன்)



லெப். மறைக்கோன்
[விஸ்வநாதன்]

## குழைவெட்டி

இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் மிதித்த போது அது வெடித்ததில் தனது இடதுகாலை இழந்தார். (சி)

அடைய வேண்டும்.

**கேள்வி:** அமைச்சரவையில் ஒரு முக்கியமான அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்ற உணர்வை நீங்கள் மீறுகிறீர்கள் இல்லையா?

**பதில்:** இனப்பிரச்சினை பற்றி நான் திரும்பத் திரும்பப் பேசி வந்திருக்கின்றேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சின் தலைவர் என்ற முறையில் தான்பேசிவருகிறேன் என்பதை அடிக்கடி நான் சொல்லியுள்ளேன் ஆங்கில ஆட்சியின் போது ஓர் ஆளுங்கட்சிஅமைச்சில் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு சரியாகவிருந்தது. நான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சை அமைச்சரவையில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றேன். நான் முன்பு கூறியது போல் ஒரு மனிதனுக்குப் பல பங்குப் பணிகள் உள்ளன ஒரு மனிதன் ஒரு பெண்ணுக்குக் கணவனாகவும், இன்னொருத்திக்குச் சகோதரனாகவும் இருக்க முடியும். வாழ்க்கையில் மனிதன் பலபாத்திரங்கள் ஏற்று நடிக்கவேண்டியுள்ளது. எனக்கு விசேட அக்கறைகள் பல உள்ளன. அவற்றை நான் காபந்து பண்ண வேண்டும்

**கேள்வி:** உங்களுடைய விசேட அக்கறைகள் எவை?

**பதில்:** சிறுபான்மையினர் பற்றியஅக்கறை; குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களைப் பற்றியதான அக்கறை.

**கேள்வி:** பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் இறுதி அமர்வுகளை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில். பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து நீங்கள் ஏன் விலகிக்கொள்ள எண்ணவேண்டும்?

**பதில்:** பாராளுமன்றத்தெரிவுக்குழு கருமமாற்றும் முறையைப் பார்த்தால், அது தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்புடைய ஒரு தீர்வை வைக்காது என்பதுதான் காரணமாகும். தமிழர் பிரச்சினைக்குத்தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் வரலாற்றைப் பாருங்கள்; முதலில் தமிழ்மக்களுக்கு ஓரளவிலான தீர்வைத்தர முயற்சித்த பண்டாரநாயக்கா -செல்வநாயகம் உடன்படிக்கையைத்தொடர்ந்தாற்போல் டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கை உருவாகியது. பல அரசியல் சக்திகளின் எதிர்ப்பால் இவை கைவிடப்பட்டன. அண்மையில் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரு தீர்வை அண்மித்தபோதும் சிலதரப்புகள் அதனை எதிர்த்தன. எப்போதும் தடைகள் இருந்துள்ளன.

தமிழ் மக்கள் தமது முயற்சியால் பெற்றதை எல்லாம் களா?

**பதில்:** தமிழ் மக்களின் அபிலாசைகளை நடைமுறைப்படுத்தக் கூடிய, பெறுமான முடையதாகத் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும். இதனைத் தெரிவுக்குழு நிறைவேற்றத் தவறிவிட்டது. எடுத்துக் காட்டாக, எனது ஆலோசனையை தெரிவுக்குழு விவாதிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. அடுத்து, சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும்படி சிறினிவாசன் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

**கேள்வி:** பிரபாகரனை நீங்கள் மிகமெச்சி அவருடன் நெருக்கமாக உளதற்கான காரணம் என்ன? எப்படியாயினும் பிரபாகரன் ஒரு கொலையாளி என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

**பதில்:** நான் பிரபாகரனை மெச்சுகிறேன். தலைவர்களை மக்கள் பல வகையான பெயர்களைக் கொண்டு அழைக்கிறார்கள். செல்வநாயகத்தைஇலங்கைக்காந்திஎன்று அழைத்தார்கள், திரு. பிரபாகரனை ஒரு மெச்சத்தக்க மனிதனாக மக்கள் பார்க்கிறார்கள். சிறிய மனிதனாக பிரபாகரன் 27 பேருடன் ஆரம்பித்து ஓர் இயக்கமாக வளர்த்தெடுத்துபத்து வருடங்களாக தனது அணியினரை நெறிப்படுத்தி வழிநடத்தி இந்தியா. சிறிலங்கா ஆகிய இரு தேசங்களின் படைகளை எதிர்த்து நின்றுள்ளார்.

**கேள்வி:** பிரபாகரனின் கொலைகளையும், சண்டைகளையும் நீங்கள் அனுமதிப்பதாகக் கூறுகிறீர்களா?

**பதில்:** சண்டை நடக்கும் போது உயிர்க்கொலைகளும் நடைபெறுகின்றன. இராணுவமும் அப்படிச்செய்கிறது. இரு தரப்பினரும் ஒரு காரணத்துக்காகவேஇதனைச் செய்வதாகச் சொல்லப்படுகின்றது. திரு. பிரபாகரன் கொலைசெய்யவேண்டும் என்பதற்காகக் கொல்வதில்லை. நியூயோர்க் நகரத்தில் எந்த விதக் கனதியான காரணமும் இல்லாமல் ஒவ்வொரு நாளும் கொலைகள் நடப்பது போல் அல்லாமல் பிரபாகரன் ஓர் இலட்சியத்திற்காகப் போராடுகிறார். பம்பாய் நகரக் வெடிகுண்டுச் சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கான ஒரு சரியான காரணம் இல்லை. இராணுவ நடவடிக்கையின் மூலம் இனப் பிரச்சினைக்குத்தீர்வொன்றை எட்ட முடியாது என்பதை என்னால் உறுதி செய்ய முடியும் ஓர் இராணுவ நடவடிக்கை இடம்பெறும்போது அதற்கு எதிர் நடவடிக்கையும் நடைபெறும். ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ச் செயற்பாடு உண்டு. மதிப்புக்குரிய பெரியவரான காந்தியைக் கூட கிழக்

அவசரகால சட்ட மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அநுரா இணைப்பு விடயத்தில் ஆளும் கட்சியின் நிலைப்பாடு தெளிவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

புலிகளின் சவாலை எந்த அரசானாலும் ஏற்றுக்கொள்

## ஐரோப்பிய

மனித உரிமை மீறல் தொடர்பாக ஐரோப்பிய பொருளாதார சமூக குழு தனது அக்கறையை தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு

ரமசிங்க வெளியிட்டார்.

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று 61 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

தார்.

## எறிகணை

மணியளவில் கொழும்புத்துறை அரியாலை பூம்புகார் கடற்பரப்பில் நைலோன் வலை மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி எறிகணைத்தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை வவுனியா நொச்சிமோட்டை இராணுவ காவலரண்களிலிருந்து நேற்று முன்தினம்இரவு 9.00மணியளவில் மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணை வீச்சும் பரவலான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

நாளை மங்களகரமான ஆரம்பம்

"கிருஷிகா ஆடை அகம்"

நாளை 25-03-93 வியாழக்கிழமை
நவீனசந்தை உள்புறத்தில்

கிருஷிகா ஆடை அகம்

மங்களகரமாக ஆரம்பமாக உள்ளது
வார்த்தைகள் வேண்டாம், வர்ணிக்க கண்களே போதும், அத்தனை அழகுமிகு ஜவுளி சமுத்திரம் அதுவே

கிருஷிகா ஆடை அகம்

69 A, நவீனசந்தை உள்புறம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- ஸ்ரான்லிவீதி சந்தி சுகுனாஸ் புடவை மாளிகை ஸ்தாபனத்தினர் வாடிக்கையாளர்களின் நலன்கருதி நவீன சந்தையில் கிருஷிகா ஆடை அகத்தை ஆரம்பிக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
சுகுனாஸ் ஸ்தாபனம்

விளம்பர அமைப்பு:
ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீனசந்தை.
[4075]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8733

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!
41-9696, 41-8875, 41-9530, 41-7563, 41-7693, 42-3267. 26-5576, 28-7662, 26-3356, 27-1141, 26-3294, 26-4727, 28-8229, 26-4526, 26-7949, 25-0554, 36-0453, 71-4984.